உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# தத்துவராயசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# அமிர்தசாரம்.

---

இஃது

[illegible]

மகா-௱-௱-ஸ்ரீ

வேதாந்தபாஸ்கரராயிலங்கிய

மகா-௱-௱-ஸ்ரீ

சிவக்கொழுந்துமுதலியாரவர்கள்

குமாரராகிய

சிவசிதம்பரமுதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி

திரிசிரபுரம்

வித்வான்

மதுரைநாயகம்பிள்ளையவர்களால்

பிழையறப்பரிசோதித்து

ஊ. புஷ்பரதச்செட்டியாரவர்களது

கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பிரபவ௵ ஆவணி௴

*Registered Copyright.*

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதினெட்டாவது

# அமிர்தசாரம்.

வெண்பா.

கலைக்கட்டளை.

## கடவுள்வணக்கம்.

ஞானக்கண் ணார்க்கு ஞானனைத் தச்சடார
ஊனக்கண் ணார்க் குமைமாய் - வானந்
தனக்குப் பெறவரிய தற்சொருபன் பொற்ற
ளெனக்குப் பெறவெளிதே யின்று. (௧)

## அருளிறைவணக்கம்.

அறியாமை யாற்றிமிரந் தந்தனுய்வீட்டி
னெறிகாண வின்றி நிலையற் - றிருவேற்கு
ஞானஞ் சனத்தாலே நாட்டத் தனைத்தந்த
கோனைத் தொழக்கடவேன். (௨)

## வேதச்சிறப்பு.

இதிலுள்ள தெல்லாக் கலைகளினு முள்ள
திதிலில்லா தியாவையினு மில்லை - யதினாலே
யாது மறிய விரும்பினுன் யாதமுள
வேத மறிவான் விரைந்து. (௩)

## ஆகமச்சிறப்பு.

சற்பவர்க ளெப்பொருளுங் காண்பவர்க்குக் கண்ணுரு
முற்பவநோய்க் கெல்லா மொருமருந்தாம் - தற்பொருட்டான்
யாதா வுணர்ந்தா ரவர்க்கதுவா மெக்கலையு
மோதா துணர்ந்தா ருணர. (௪)

## அறிஞருரைச்சிறப்பு.

எத்தக் குலமாயென் னெத்தக் கலியாயென்
னெத்தச் சமயத் தெவனாயென் - இத்தைத்
அறவி தருஞ்சொல்லே யாப்தமா நல்லாத்
பிறவிதருஞ் சொல்லே பிற. (௫)

## நூற்பெயர்.

வேதா கமமோதி மெய்ம்மை விளங்குதற்குப்
போதா தெவர்க்கும் புருடாயு - வோத
வருமமிர்த சாரத்தே யுள்ள மதனுற்
பெறுமமிர்த சாரமெனும் பேர். (௬)

## அவையடக்கம்.

வேத மொழிப்பொருளை விள்ளவர்கள் நூலருமுன்
போதவுணரா வுலகறிய - வோதுகேன்
வானின்ற வல்லிருளை மாற்றுமின் றேறெழுப்பான்
யானென்ற மின்மினியே யான். (௭)

## நன்னெறியுரைத்தல்.

இம்மை மறுமை நிலையன் றெனவிகக
செம்மை நெறிகடக்க நிற்குந் - தமைமீட்க
தம்மையுணர்ந்தோர் தலைப்படுக தத்துவத்தின்
மெய்ம்மை யறிக விளங்கு. (௮)

### அருமையுரைத்தல்.

பெறவரிது மக்கட் பிறவிபெற் றாலு
மறிவுநூ லாய்த லரிதே யதினுந்
துறவுடைய னாத லரிதே யதின்மெய்
யறிவுடைய னாத லரிது. (௯)

### ஞானிலக்ஷணம்.

அறிவுள்ள தல்லதில தென் றறிவான்ஞானி
யறிவான் முழுது மறிவா - னறிவை
னறிவறி யானை யறவிருத்த வல்லனல்
மறையோனும் வான்பொரு டான். (௧௦)

### ஞானிசீலம்.

அருந்தல் பொருந்த லையொக்கு மேனும்
பொருந்தலையோ ருள்ளம் பிறிதே - திருந்து
மனத்தின்வே றேபதியு மைந்தனுமம் மாதின்
றனத்தின்வே றல்லவே தான். (௧௧)

### ஞானிசரிதை.

தீதென நன்றெனச் சிந்திப்ப ரோதெளிந்தோர்க்
கோதற மன்றே யுலகெலாம் - பாதகத்தித்
தீதாத னன்றாதல் சிந்திக் கிடச்சாத
வேதாவிற் றன்றோ விதி. (௧௨)

### ஞானிபெருமை.

விண்ணே பெரிது மிகவீசன் கைவுரியா
மண்ணே யதுபெற்ற மாமாயை - யெண்ணிற்
சிவனிற் பெரியாரிற் சிந்தையிலார் வைத்தா
ரவனிற்பெரியா ரவர். (௧௩)

## ஞானியேவற்சிறப்பு.

எங்கே வெளிப்படுக வென்று னெழின்ஞானி
யங்கே வெளிப்படுதற் காதரித்தே - யெங்கும்
பரமனவ னேவல்செயப் பார்த்திருக்கும் யார்தான்
றரமவ னேவ றனக்கு. (௧௪)

## ஞானிபூசைச்சிறப்பு.

அவனுண்ட தண்டமெலா முண்டதயனுஞ்
சிவனுந் திருமாலு முண்டான் - சிவமென்னும்
பூரண ஞானியைப் பூசித்தான் பூசித்தான்
காரணனைக் கன்றாக் கண்டு. (௧௫)

## ஞானியையிகழ்ந்தவர்கேடு.

எழின்ஞா னியையிகழ்வார் கேட்டா ரிகழ்கேட்
டழலா ரனுமதித்தார் நல்வர் - கழலுதன்
மேதக வென்றவரை விட்டக லாதார்பஞ்ச
பாதக ரென்னப் படும். (௧௬)

## கூடாவொழுக்கம்.

யோகத்தி லுண்மை புணர்வின்றி பூண்பொருட்டா
லேகத்தி னின்றே மௌனியம்பி - மோக
மனத்தவலை மாற்றுத வல்வேடர் தம்மை
நினைத்தவருங் காணார் நெறி. (௧௭)

## கணணவிழி.

நன்ஞான ஞானி மரியா லொருநாளு
முன்ஞான மோக விருண்முருக்கித் - தன்னுருவைக்
கண்டபொழு தேகழியுஞ் சூக்கவுடல் கன்மமல
முண்டுபோந் தூல வுடல். (௧௮)

தத்துவ ஞானி திருமேனி தாங்கிஞ
ருத்தம லோகத்தி னும்பரா - முத்தன்
திருக்கோயில் கொண்டவிடந் தேவா லயமென்
றிருக்கோது கின்ற விடம். (௧௯)

உலககாரணம்.

அணுவென்பர் மாமாயை யென்பரணுவின்
புணர்வென்பர் பூதமே யென்பர் - குணமென்ப
ரெவ்வே றவுமோ ருலகிற்கே தேதுவென்று
வவ்வேறு வேயேது வாம். (௨௦)

காரணகாரிய வேறின்மை.

மண்ணு முதற்பொருளின் மன்றோத விவ்வுலகம்
பின்ன மெனுமாறு பேசற்க - பொன்னே
யணியா வதன்றென்று மப்பொனே காய்ச்சி
மணியான போது மறிந்து. (௨௧)

படைப்பு.

ஞானைத் தச்சடராய் நன்றுறி யொன்றுன
தானேயிடத்தித் தொன்றன்று - ஞேவா
யார்த்த கடவுகை மாமோ வியமெழுதிப்
பார்த்து மகிழ்ந்தான் பரன். (௨௨)

நானிலத்தீர் பைமுட்டை நால்வகை யோனிசரா
மானிடர்தீர் வாழ்பறவை மாகிருமி - ஞானமிலா
மண்பட்ட தாபரமென் றேழாய் வரும்பவரா
றென்பத்தி னுன்கா யிரம். (௨௩)

ஈரொய் பதிறென்று மொன்பானு மானுடவர்
நீர்பறவை நாற்கால் சேர்பத்தாந் - சிற்றிகமு

மூவாறுந் தாபரங்கண் முப்பத்து மும்மையோ
ராவா ரொருபதா றும். (௨௪)

## அணுப்பிரவேசம்.

ஆன கடங்க ளனைவிலவற் றுட்புகுந்து
வானகந் தானின்ற வாறொக்கும் - யோனிகளெண்
பத்துநான் காயிரா றாகப் படைத்தவற்று
ளித்தனார் நின்ற நிலை. (௨௫)

## அழிப்பு.

ஆன வுடம்பனைத்து மைம்பூதத் தேயழியும்
வானுதி பூசமிது மாயையினி - ஞானு
வொழிந்தமா மாயவிரு ளன்னொளியா யும்ப
ரெழுந்த ஞானத்தா லிறும். (௨௬)

## பவகாரணம்.

செறிபொருளா தாகித் திகழ்பளிங்கு போல
வறிபொருளா தானவறி வன்றான் றன்னை
யறியப் பிறவி யறலாம் பிறவிக்
கறியாமை யாகு மடி. (௨௭)

## உடலுற்பத்தி.

ஆசுபன்வா னுருதியா கல்குமதி ரோடுநியா
மோதனமுன் டாயிருநீ ருண்டாகு - மாதாடனுண்
டன்னுருவா மிக்கநீர்க் கண்டதுச மங்கனிழ்தல்
வன்னிபுழு வுண்டேன் மலம். (௨௮)

## பிண்டகோசம்.

சுவர்செய்து மண்டசையாச் சோரிநீ ராக
விவரங்கள் காலியங்க விட்டுக் - கவர்காக்க

ணட்டுக்கை வைத்து நரம்பிட் டிரம்பெறவே
கட்டித்தோல் வேய்ந்தவகங் காண். (௨௯)

பிண்ட வுருவிற் பிறந்தவாற் கெர்ப்பத்திற்
பிண்டவுருவா யிருந்தவா றுறைஞும்
பிண்டமிட வென்றிதனா லவ்வுடற் பிண்டம்
பிண்ட மெனப்பேர் பெறும். (௩௰)

அண்டகோசம்.

நிலனேழு சூழவரு நீரேழு நேழ்பா
தலனேழு வானேழு தம்பக் - குலகிரிக
ளெட்டுகடு மேருகிரி யோமகட கஞ்சூழப்
பட்டுளதோ ரண்டப் பரிசு. (௩௧)

அண்டபிண்டவொற்றுமை.

வெளியசைவு வெம்மை நெகிழ்வுபாமாம் விண்கா
லொளிபுனல்மண் கன்னுதலா ஞைகளன் - குளிர்மதியங்
கொண்டிப் தனைநிவு கோசமாம் பிண்டத்து
மண்டத்து முன்போ லயல். (௩௨)

வீடுபற்று.

கெடுத்தாமன்மை நினைவுபோ மாறுங்
கடும்பரி கால்வைத்து வாங்கல்-படங்கனைத்தோர்
புட்டகம் வேறே புனைக விவைபோறும்
விட்டிட வக்கொன்றும் வினை. (௩௩)

உற்பத்தி யாத்தாதை வாயு வுடன்கூடிப்
பொற்புற்ற கொங்கையர்தம் போகத்தே - கெர்ப்பத்தைக்
கொண்டுதை செல்லுமெனக் கூறுயிர் கூறீர்கண்
மண்டுகேஞ் சென்ற வழி. (௩௪)

## உடலிழிவு.

மணனொன் றியமாந்தர் வாயுப்போங் காட்டிற்
பிணனென்று பேரிட்டுப் பொத்தக் — கணன்வந்து
புட்குத்து மிவ்வுடலிற் பொல்லாங் கொழிந்திருப்ப
தெட்குத்து முண்டோ விடம். (கரு)

## குடும்பவிழிவு.

திடன்படு சீலந் திகழ்கல்வி கேள்வி
யிடம்படு மேதைதி ரெல்லாம் பசமட்
குடம்படு நீர்போற் குடும்பினையக் கைவிட்
டுடம்போடு கூட வரும். (கசா)

## போகவிழிவு.

சிந்தா குலமளிநர் தீதீ செவிமுதலா
மைந்தாறு மீடழிவ ரல்லரோ — வைந்திலொரு
வேட்கை யசண மிபம்விட்டின் மீன்வண்டு
கேட்கைமுத லொரொன்றிற் கேடு. (கஎ)

## மகவிழிவு.

எரிகொண்டு மல்ல வெழிபடைகொண் டல்ல
வருநஞ்சுங் கூற்றுங் கொண்டல்ல — கருநெஞ்சத்
தம்மாதர் தம்மைப் படைத்த தனியிறையார்
தம்மாலே யாகத் தரும். (கஅ)

## பொருளிழிவு.

இன்னலா மீட்டுங்கா லீட்டுநு வியாவையா
மொன்ன லராக்கு முயிரிழக்கு — மன்று
மனத்தைவே மெய்மையக்கு மாணபிக்கஞ் செய்யுந்
தனத்தின்வே றுண்டோ தவறு. (கக)

அரசிபிரிவு.

முரசு வழங்குதம் முற்றத்திற் றெற்றி
யரசு வணங்குங் கழலா - ரொருசணங்கன்
கவ்விய காலிற் கடைகடோ அஞ்சுழல்வர்
வெவ்விய சொல்ல வெறுத்து. (௪0)

சுவர்க்கபிரிவு.

பொதுமாதர் தோளே புணர்வை தமிர்த
மதுபான முண்டே மகிழ்வ - திருகோடி
சாவார் பிறப்பார் சதுமுகரோர் நாளினிது
தேவா திபரெய்துஞ் சீர். (௪௧)

நிலையாமை.

உலகி னிலைபிற்ப தொன்றில்லை யென்றே
தலைவர்கள் முறைகுஞ் சாற்றிரு ரக்கே
மலைவுறு மார்க்கர் மரு மதனு
னிலையின்மை யொன்று மிலை. (௪௨)

நக்கதிநாருதி.

கருக்குழவி கௌமாரங் காளைப் பருவம்
விருத்த மதைழவெய்யபில் வீசும் பனிக்கால்
கருத்தி லுறக்க முணர்க்கியெக் காலைத்
தொருத்தனின் பக்கை யுமம். (௪௩)

ஆறவை.

மடம்படு பிப்பிறனி மாற்றனிலை வாரக்
குடம்பு பிகைகயொல் அணர்வுற் - றடங்கக்
அறவா மனிதத் தெனிதன்றே அருந்திப்
பிறவா நெறியைப் பெற. (௪௪)

## புத்தன்.

ககனமு மான்மாவுங் காரணமு மில்லை
சகலமு மாமநித்தஞ் சார்வார் பிறவி
வகைவினை யுண்டு மதிபொன்ற மாய்தல்
சுகதன்றன் முத்தித் துணிவு. (௩௫)

காரணமே யான்மாக் கணபங்கி நித்தப்
புரணமோ வீசன்வான் பொய்யே - மரணமே
வீடென்று முத்திகளின் வேறோவிப் புத்தனெனு
மூடன்றான் சொன்ன மொழி. (௩௬)

## சமணர்.

அருவுரு வுண்டில்லை யொன்று பலவாம்
பொருளியல்ப ஞானமே போத - மருகர்க்
குருவினை விட்டா லுலகும்பர் வீடு
குழியகற் கெட்டுக் குணம். (௩௭)

வெளியிற் பறந்துபோய் வீடெய்துப் பெற்றாய்
குளிர்வெம்மை கண்டாயோ கூட - வுளதில்லை
யொன்று பலவென்று முனைவென் றுயுணர்வை
யென்றுமதி கண்டா ரியார். (௩௮)

## உலோகாயதம்.

இறந்தார் பிறவா ரிலைநல்வா வீச
னறம்பாவ மாயிழையார் கூடல் - சிறந்த
நலனோர் சுவர்க்க நரகம் பிறிது
முலகா யிதன்ற றுணர்வு. (௩௯)

சடவுடலு நன்மைசாக் காடு நரகங்
கடவுள் வலிகாட்டுங் கண்ணுங் கருமம

முடியாமை காட்டு முன்னவினையை மாத
ரடைவதே காட்டு மனறு. (ரு0)

பீமாஞ்சகன்.

காருகளைக் கந்திங்கு கன்றுங் கருமத்
தருமிறை தானன்றி யில்லை - பிரமமொளி
காடுங் குணன்புத்தி ஞானமில்பா டானம்போல்
வீடென்றான் மீமாஞ் சகன். (ருக)

சித்துச் சடமாகை யோமுத்தி செய்வினைகள்
சுத்தச் சடமீய வற்றே சகலுக்கம்
புத்தி குணமாயிற் பொன்றுமோ வான்குணமாஞ்
சத்தம் பிரமமோ தான். (ருஉ)

நியாயம்.

அணைக்குற்ற வான்மாவேகம் வியாபி
குணம்புத்தி யாமுத்தி கூறிற் - பிணம்போல்கை
மெய்யா யிறைவினையும் வீட்டுக் கேதுவா
கையா யிகறு னைம். (ருங)

செயாறு வினைச்சடமாய்ச் சென்மத்தைச் செய்யிற்
றயாவிலரு மவ்விசன் ருறும் - வியாபி
குணமாயிற் புத்திக்குக் கூடா தொழிக்கும்
பிணமாகை யோவீடு பேறு. (ருச)

வைசேடிகம்.

முத்தியிலிக்குணரும் முன்னம் குணக்குணியாய்ப்
பத்தியினன் முத்தியிலம் பாவனையாற் - சுத்தச்
சடர்ப்பல ராயவற்றை சார்தலான் மாக்கள்
கடனென்றான் வைசேடி கன். (ருரு)

ஆவ சடலங்க ளான்மாவே யாமனம்போ
லோவு மவத்தையு மூன்றுணர்விற் - பாவனையாற்
கூடுமோ வீடு குணம்போய்க் குணியுண்டோ
சூடுபோய்த் தீயுண்டோ சொல். (௫௬

## சாங்கியம்.

பகுதிபுமான் மெய்ப்பகுதிப் பாலே விகுதி
சகலந் தனதென்கை பந்தமாம் - விகுதியாம்
யாதும் பகுதி யுடையதெனக் கில்லையெனும்
வேதனஞ் சாங்கியன்றன் வீடு. (௫௭

முன்னமே யுண்டேற் பகுதியதான் முத்தியிலே
பின்னுஞ் சடமாம் பகுதி பெறக்கூடா
தன்றேலவீ டெய்து மாகிலீ சற்குருவைக்
கொன்னேவிரும்பியதென் கூறு. (௫௮

## சைவம்.

மடவன் பசுபதி வாலறிவன் பாசஞ்
சடமா மியல்பு சமமா - முடன்வியாபம்
பண்டுளவை மூன்றும் பசுபாசம் போயிறையைக்
கண்டுறைதல் சைவன் கதி. (௫௯

ஈசனரு ணொற்றமே தெல்லாம் வியாபித்தாற்
பாசமி லாதான் பதியென்னிற் - பாசமெனில்
விண்டிடா தாம்பதியால் மெய்கரணம் வேறுண்டாய்
கண்டிடா நின்ற கதிக்கு. (௬௦

## சம்மேளிதசைவம்.

பாசமாம் பந்தம் பசுப்பெத்த முத்தரு
மீசனாதி யிவர் ஞானம் - பூசையா

மம்மோக மாற்றி யவரொன்றல் வீடென்றான்
சம்மே ளிதச்சைவன் றான். (௬௧)

பெத்த மகாதி கெடுமான பின்கெடுமே
முத்தியும் பாசத்தான் முன்னுளா தேத்கெடுமே
சத்தி யெனில்வெம்மை போலுந் தழலுண்டோ
வுத்தி யிலதிரண் டொன்றாகா தொன்றுகெடின்
முத்தி கெடலோ மொழி. (௬௨)

## பாசுபதம்.

அகில மிறைமுன் பனுத்திரள் செய்யுஞ்
சகலான் மாக்க டீனயா மலக்க
ளுகமலம் பூசையா லொப்பாகை முத்தி
பகர்கின்றான் பாச பதன். (௬௩)

சகம சுதுவாஞ் சடஞ்செய்யு மாறென்
புகனுறவும் பூதமே யன்றோ -- வகையில்
கிரியையாம் பூசை கெருமலங்கள் போக்கி
லிரிய மிருளா லிருள். (௬௪)

## வாமம்.

தன்வலிய சட்கச் சமயிக ளெவ்வுருவும்.
பெண்ணுருவிற் காணும் பிறப்பகெலா - முண்ணறவே
புத்திய முத்திப் பொருளைத் தரும்பினைமே
சுத்தி யிலாதவெலாந் தான். (௬௫)

மேதினி யொன்றை மிளக்குமோ வித்தின்றி
மாதா தருதல மையற் பிறப்பன்றே
போத மழிபுனீர் புத்திக்கு முத்திக்குஞ்
சாதன மானதோ சாற்று. (௬௬

### வைராவம்.

ஏகமாம் வைரவமென் டத்தவமா மென்கலையா
யாகிய ஞானத்த னுர்க்கலையாந் - போகமா
முத்திரித்து நால்வகை ஞுல்வகை யோகத்து
வித்தரித்து முன்னவிரால் வீடு. (சாஎ)

ஏகத்து பல்லெகமே மெட்டாருன் மற்றவையே
யாகிற் கலெசால்லா தாரறியும் - போகமுனக்
குள்ளதோ வன்றே தருவாருரு கருத்தோ
கன்னதோ நன்குங் கழி. (சாஅ)

### காளாமுகமாவிரதம்.

வெளியென் பக்ரு முருவிக்கு மெய்விரதக்
தானுவுதாட்பாதாவீத் தப்பாமற் - பேணிப்
புனதங்கா தானவிவை யோகம் புகன்மா
விரதங்கா ளாமுகன்றன் வீடு. (சாகூ)

தவவேடங் கொண்டவுட னுரைத்தாற் போமே
யவைவேயாகின் றீட்டுத்து முன்னைக் - சிவலோக
மெய்குமெனக் காணுந்த போயிடத்தே போதிருர்
சங்கையில் வீழ்வதற்குத் தான். (எ0)

### சிவாத்துவிதம்.

அருளி சிவத்தைச்சத்து மாருவிரு மாகத்
தருதுருவைத் தானே பருதி ஆத் - தனுமொழியப்
பேதிழ விவ்வே பெருவைத்து மீவாறும்
வேதில தென்றறிகை வீடு. (எக)

தானே சகத்தாய்ப் பரிணது தான்சடமாந்
தானே பிறப்பாக்கிற் றுமெ மறியுகின்ப - றுனேதன்

கண்ணைக் கலக்கிக் கடவுளா முற்சிவம்போய்
வெண்ணைக்கழுமோ விளம்பு. (எஉ)

## வைஷ்ணவம்.

நாரா யணாதிதிரு நாமந் தரித்தலா
லாரா தனையா லடிமையெனப் - பேராழி
கோயிற் பொறியால் வைகுந்தப் பதந்தந்தை
தாயிற் றருஞ் சீதரன். (எங)

மண்ணா விடுநாமம் வாளெரியா லிட்டகுறி
புண்ணா முடம்பொழிந்தாற் போகாதோ - விண்ணாடில்
வைகுந்த மேவுதிரு மாலுருவங் காணவொரு
மெய்கொண் டிருக்குமதோ வீடு, (எச)

## மாயாவாதம்.

அவிகார மேபிரம மாயையினா லாகி
யிவிகார மெல்லா மிறக்கும் - பவமான
ஆனதும்பொய் ஞான முதித்ததும் பொயஞ்ஞானம்
போனதும்பொய் மற்றுமெலாம் பொய். (எரு)

அவிகாரத் தன்மை யவிகாரங்காணி
லவிகாரந் தானல்ல வாகு - மவிகார
மாயை யறியி லவிகாரமாயையாய்
வீயும தாரறிவார் வேறு. (எகூ)

## சௌரவாதம்.

தோற்ற நிலையிறுதி செய்தலாற் றொல்லுலகி
லேற்றவிரு ளெல்லா மிரித்தலாற் - போற்றவருஞ்
சங்கரன்மா னான்முகனாய்த் தற்பரனாய் நிற்கின்றான்
வெங்கதிரோ னல்லதிலை வேறு. (எஎ)

ஈசன்முனிய வெயிறு விழவிழுந்தான்
மாசுண வாயின் மறைப்புற்றான் - நேசினு
முற்பவமா முள்ளத் திருவொழியா னொருவன்
றற்பானு வல்லனோ தான். (எஅ)

## சோமவாதம்.

போதல் வருதலுளன் பூரணனு மல்லனிவன்
பாதிநா ளொன்றான் பகலவன்றான் - சோதியா
யிந்திர சால விருளொழியா னென்னலாற்
சந்திரனு லென்செயலாந் தான். (எகூ)

## ஊழ்வாதம்.

தருகம் வினையே தரில்வினைதான் செய்ய
முருக முளதாய் முடியு - மருஜியெனி
லெஞ்ஞான்று முத்தி யிலதாகு மிவ்வூழிற்
கஞ்ஞான மாகு மடி. (அ0)

## மந்திரவாதம்.

மந்திர மானதெலாம் வார்த்தையே யவ்வார்த்தை
யந்தர வானின் குணனாதலே - வந்து
பலியா தருள்குருவைப் பாவியா னுயில்
வலிதா னவன்றன் வலி. (அக)

## மருந்துவாதம்.

மருந்தா னொருவரிம் மாநி லகத்
திருந்தா னெனக்கண்ட தில்லை - வருந்துவதேன்
யார்க்கு மழிவு வினைப்பதாம் யாக்கையெனு
நீர்க்குமிழி பூண்கட்டி நீ. (அஉ)

### சாதிசங்கற்பம்.

ஆதிபே தந்தா னிலாமை யறிந்தவர்கள்
சாதிபே தஞ்சிறிதுஞ் சாற்றுவரோ - சாதிகுல
நல்லார் தொழத்தக்க ஞான முடையவரே
யல்லா ரிழிகுலத்தா ராம். (௮௩)

### தீர்த்தசங்கற்பம்.

அறன்சாரா வுள்ளத் தறியா வழுக்குப்
புறன்சாரு நீராலே போமோ - திறன்சாரா
வோடுந்தீர்த் தந்தா னுடற்கே யுளம்விளங்க
வாடுந்தீர்த் தந்தா னறிவு. (௮௪)

### அருச்சனுசங்கற்பம்.

சலமுழுகி நீர்தேடிப் பூத்தேடிச் சாணி
நிலன்மெழுகி யர்ச்சியா நிற்பர் - புலையிலவ
ருள்ளத்தே நின்ற வுலப்பில் பரமானந்த
வெள்ளத்தே நின்று விடாய்த்து. (௮௫)

### அத்துவாசங்கற்பம்.

இந்நெறி யிந்நெறியென் றெம்மார்க்க மும்பகர்க
வந்நெறி யெல்லா மறிந்தவழி - வெந்நெறியா
லெய்தலா மந்த நெறியென் றறைந்தமறை
மெய்தலா வீட்டி னெறி. (௮௬)

### சாத்திரசங்கற்பம்.

ஓது முறையின் பொருளுணர்ந் துள்ளபடி
போத மறியாப் புலவர்தா - லோது
மொருகோடி நூறு மிரந்தாலு முண்மை
யருகூடு போகா ரவர். (௮௭)

## பிரமாணசங்கற்பம்.

அறியப் படுமளவை கொண்டளவை யெல்லா
மறியக் கடவ வறிவை - யறிய
விருப்புற்றிடுவான் விறகுதனைக் கொண்டு
நெருப்புச் சுடுவா னிகர். (அ)

## தர்க்கவாதம்.

தர்க்கநெறி வென்றக்கால் றம்ப மிகப்பெருகுந்
தூக்க மிகப்பெருகுந் தோற்றக்கால் - றர்க்க
நிலைபெறுவ தொன்றல்ல நெஞ்சகன்றக்கத்தூந்
தலைபறியே யெய்துபயன் றான். (கூ)

## வாதத்தொகுதி.

உரைத்த நூலையா நுரைக்குஞ் சமயம்
பரத்தை யறிவுற்ற பான்மை - மரத்தி
னவயவத்தி னேறொன் றறிந்தார் மரமா
வவயவத்தைக் கொண்டவா றும். (௰)

## கேடுகண்டிரங்கல்.

கருத்துகட் டிடாய்க் கழிபலவா வீசு
னுரைத்ததென் றுன்னுரை யொட்டா - புரிந்தின்
நிலைதுள தென்னு முளநில தென்னுங்
கலதியர்க டஞ்சமயக் கத்து. (கக)

## நன்னெறி.

எய்த வெளிதா மிறையரு ளில்லையே
லெய்த வரிதா மியாவர்க்கு - மெய்தெளிந்தா
லெம்மார்க்கத்தோடு மிசைந்திருக்குமதே
சன்மார்க்க மாகுநெறி தான். (கஉ)

## அட்டாங்கயோகம்.

இயமநியமாதனம் வாயு விசையங்
கமையுறு பிரத்தியா கார - மமைவுறு
தாரணை தக்க தியானஞ் சமாதியென
வேரணியும் யோகங்க ளெட்டு. (கங)

ஏம முறுமியம மீரைந்திவைதன்னிற்
றூய்மை யருளுநண் சுருங்கற் பொறைசெவ்வை
வாய்மை நிலைமை வளர்விப்ப மாற்றுவ
காமங் களவு கொலை. (கச)

வாய்மை யெனப்படுவ தியாதெனின் வாய்மையினத்
தீமை யிலாதவெனச் செப்புவர்க - டீய்மைமிக
வோதும் பரமா முலைப்பிலா வொன்றென்பர்
வேத முடிவுணர்ந்தோர் மெய். (கரு)

மம்மர்செய் யாமை வதையாமை யெவ்வுயிர்க்குந்
தம்முணர்ந்தோர் தம்மை வதையாமை - தம்மை
பெறிபடை கானீ ளெரியிற் படாமை
யறிகை யெனவறிவ ரால். (கசு)

மறுகையில் வஞ்சனையி னோர்பொருளை வௌவு
மறுகள வென்ப ரறிஞர் - மறமோகிற்
றன்னதல் லாத வுடம்பைத் தனதா
னென்னல் களவாகு மென்று. (கஎ)

அரிவையர் தம்மை யணுகாமை யாகும்
பிரம சரிய மதினும் பெருகற்
கரிய பிரமத்தொன் றுணர் பிரம
சரிய முடையவரோ தான். (கஅ)

தாயோடு தந்தைமகத் தாரந்தான் சத்துருவாந்
தீயவனு நேரொக்கக் காணுமது செவ்வையாந்
தூய நிலைமை சுருதி தெரிந்துணர்வு
தாயர்போன் றன்பு தயா. (௯௯

மிகைசெய்தார் தம்மைத்தாம் வென்றாவிட வேண்டி
விகல்செய்யா தென்றும் பொறுக்க – விகல்செய்யிற்
கோபத்தை யொன்றையுங் கொல்க வதுவல்லா
ரூபத்தை யெல்லா மறும். (௧00

அற்புத யோகிக் கனுகூல மானது
ணற்பவு றுவை தெனவறிக வாயின்ற
பொற்புறு நீரிற் புறந்தூய்மை யுட்டூய்மை
சிற்பொருளா லுள்ளத் தெளிவு. (௧0௧

நியமம்.

தவஞ்செபஞ் சந்தோட மாத்திகந் தானஞ்
சிவன்றரு நல்விரதஞ் சித்தாந்தக் கேள்வி
யுவந்த சிவபூசை யொண்மதிநாண் பத்து
நிவந்த நியமங்க ளாம். (௧0௨

தவநோன்பா லுண்சுருக்கித் தம்முடம்பை வாட்ட
லெவனுன் பிறவியெனக் கெய்திற் றெத்தாலே
சிவமான முத்தித் திறனேதென் றோர்தல்
பவமாறப் பண்ணுந் தவம். (௧0௩

கூடியது கொண்டமைதல் சந்தோடஞ் சோகங்க
நாடுமுதலா நவிலின்ற வெப்பதுமும்
வீடிப்பா முளாந்தே மெய்காண் மகிழ்ச்சிசந்
தோட மெனுஞ்சுருதிச் சொல். (௧0௪

ஆத்திகம் வேதநெறித் தோற்றமா மாதரத்தோ
டூத்தல் பயன்கருதா நிலையாங் - சாத்திரத்தால்
வந்தித்தல் வாயார வாழ்த்தன் மனத்திறையைச்
சிந்தித்தல் பூசை செயல். (௧0௫)

பிரமந்தா னுய்த்தெளியப் பேசுமறைக் கேள்வி
திரிவன்னத் தோர்கட்குஞ் சித்தாந்தக் கேள்வி
புரையில்புராணந்தான் பொய்யிலாமாதர்
சூதவேளாளர்க்கு மாம். (௧0௬)

மந்திரந் தாரக மாதியா மன்னிருடிச்
சந்த மதிதெய்வந் தான்கொண்டு - முந்தி
புரைவாய் ஞுடியுள்ள லொன்றிற்கொண் டோரா
யிரமாம்பயனுண் டிவை. (௧0௭)

வெறுத்தே யரிதெனினு மென்மேல் விருப்ப
மறுத்தே யிதுவே யறம்பொரு ளின்ப
மிருதானவீடு மெனக்குரவனேவன்
மறு செயன் மாவிரத மாம். (௧0௮)

ஆசின் மறைநெறியி னுதரவு தான்மதியாம்
தேச வழுகிற் சிறந்த மறைநெறியி
லாசிநுவென்னுங் கருமத்தருவைத்துக்
கூசுது நாணமெனக் கொள். (௧0௯)

## ஆதனம்.

பத்திரங் கோமுகம் பங்கே ருகஞ்சிங்கஞ்
சொத்திகம் வீரஞ் சுகாதனம் - முத்த
மயிலா சனத்தெண்ட மாயோ கியர்கள்
பயிலா சனங்களிவை பத்து. (௧௧0)

செவ்வே யுடலுங் கழுத்துஞ் சிரமுமுற
வெவ்வா தனத்தே யிருந்தவர்க்குங் - கைவந்த
வாத முதனோய் நலியா மதியுடையோ
ராதன மென்ப தது. (௧௧௧

பிராணாயாமம்.

வாங்கிப் பதினாறு மாத்திரை நான்மடங்கு
தாங்கித்தப் பாதி தனைவிடக் கால்வலத்தால்
வாங்க விடத்தி விடத்தே வலத்தில்விட
வோங்கார முச்சரித்துக் கொண்டு. (௧௧௨

பிரத்தியாகாரம்.

ஒருக்காலு முள்ள முபாதியே யாகப்
பிரித்துணர்வைக் காண்டலும் பின்னுபாதி
களைந்துப் பருகிவெறுங் கண்ணுக் குதலும்
பிரத்தியா காரமெனப் பேசு. (௧௧௩

தாரணை.

ஆய வுடம்பனைத்து மைம்பூதத் தேவைத்த
மாயையி லேவைத்த மாபூத - மாயை
பரத்திலே வைத்தப் பரமேதா னாகத்
தரித்தலே தாரணை தான். (௧௧௪

தியானம்.

பொருளின்மை காண்டல் புலத்தியான முன்னா
பொருணினைதல் புத்தித் தியானம் - பொருளறிந்த
போத மழிதல்போ தத்தியானம் போதமே
யாதல் பரத்தியானமாம். (௧௧௫

சமாதி.

காய முதலையா கா[illegible] தியிலையழித்து
மாய விருளினவை மாள்வித்து - மாயை

யொருக்கித்தன் னுற்று னுளபரத்தோ டொன்று
யிருக்கை சமாதி யியல்பு. (௧௧௬)

அணிமாதிபலவிகழ்ச்சி.

நல்லவியோ கெட்டு ஞானத்திற் கங்கமெனுச்
செல்வ மணிமாதி சிந்தைசெய்வார்க் - கல்ல
லிரும்பின் சுவர்கரும்பின் கோலா லிடந்து.
விரும்பித் தவிடெடுப்பார் வேறு. (௧௧௭)

ஈருடல்.

வேய்ந்ததோல்சோரிதசை வெள்ளென்புமச்சைசினை
சேர்ந்த திரமே தேகமா - மேய்ந்த
வகனுற் கரணமீ ரைம்புலன் வாயு
பகர்சூக்கம் பத்தொன் பது. (௧௧௮)

பஞ்சகோசம்.

அன்னம் பிராணன்மனஞான மானந்த
மென்னுங்கோ சங்க ளிவையைந்தும் - பன்னுங்
கிரமத்தாலொன்றிற்கொன்றுள்ளாகுங்கேடில்
பிரமத்தாலாகுநிலைபேறு. (௧௧௯)

பஞ்சாசயம்.

பந்திக்கு மாமாசயம்பக்கு வாசய
மந்த மலமுவர்நீ ராசயங்கள் - மைந்த
குறைதரு கெர்ப்பா சயமென் றுடற்கே
யுறைதரு மாசயங்க ளைந்து. (௧௨௦)

ஈரேழுநாடி.

ஈரேழு நாடி யிடைபிங் கலைசுழுனை
வாருணைநாப்பூடா வயிரீ யலம்புருடை

காந்தாரிடைசுளிசங்கினியுந்தி
சிறுவைகுருபுருடன் கூ. (கஉக

ஈசேரமுனாய்.

பிராணனபான னுதானன் வியானன்
னாகனிகைசயன்றேவதத்தன்மை - யிருநரனே
அந்தரியாமி முனியன் பிரவஞ்சன்
வைரன் சமானன் வளி. (கஉஉ

ஷடாதாரம்.

மூலாதிட்டான மணிபூரகம்விசுத்தி
யேநுமனுகதமாஞ்சைதூ யிருமுன்றின்
மேலாதாரத்துமடுவெம்மேயாள்விசுத்தியிற்றி
மூலாதாரத்தையறுமின். (கஉங

அஷ்டவிகாரம்.

உன்னவருங்காமகோபமுலோபமுடன்
மன்னுமுமோகமத மாச்சரியத்
தன்னேமிகமிக்குத்தம்பம்பொருமையென்று
மின்னல்விகாரங்களெட்டு. (கஉச

ஷட்பாவனை.

ஒன்றிப் பிறக்க லுனதாத லோகிக்லையா
ரன்றிப் பருக்க லறுக்கேய்தல் - பொன்று
லெனுமாறு பாவமே மிவ்வுடற்கே சூரன
கனமாம் தனக்கில்லை காண். (கஉரு

சட்கோடி.

வீடுபெற் றில்லை பிறிதொன்றி ருற்றவின்னை
வீடுபெற் றில்லை பிறிதொன்றைத் தன்றனும்

வீடுபெற் றில்லைதன் குற்றன்னை யிவ்வாறு
கோடியு மில்லை தனக்கு. (கஉ௬)

சடனம்.

அன்னபா னங்கள் பிராண னடையாகு
மன்னுமகிழ்வு மடிவு மனத்தன
வின்னலா மூத்த லிறத்த லியாக்கையை
ஞன்னுக்கு நாடிவி லது. (கஉ௭)

முக்காரகம்.

மயலுடல் வாக்கு மனனென்று மாந்தர்
துயருறு மின்பமுந் துன்பமுந் துய்க்கச்
செயலுறா சிந்தனை நீமையு நன்று
முயல்வன காரக மூன்று. (கஉ௮)

மும்மலம்.

உருவுணர வொன்று வகையுணர்வை யொன்றி
மருவிய வாணவ மாயை - கருமங்கள்
மூக்கும் தவிடு முமியு மிவையாக்கை
யாக்கும் பவவித்துக் காம். (கஉ௯)

முக்குணம்.

சுத்தமாஞ் சாத்திகமுந் தூய்மை யிருமதமு
மத்திம ராசதமு மாந்தர்க்கு - சித்த
மறிவறி யாமை யவற்றின் புணர்ச்சி
குறியுடைய மூன்று குணம். (க௩௦)

முப்பிணிக்குணம்.

நீதி கருணை யிலைமை யளிமானம்.
போத மவை யின்மை போரிற் புறங்கொடுத்தல்
மேதக் கவர்பழித்தல் வேண்டா தவைபிதற்றல்
வாதக் குணமு மதி. (க௩க)

அறிவுடைமை யைந்தடக்க லாகுந் தூறுரு
நெறியுடைமை சொல்வன்மை நீர்மை - பெறவரிய
வத்து விஞ்ஞானத் தாதாவா மாண்மை யிவை
பித்தகுண ருவதெனப் பேசு. (௧௩௨)

பொறிபிற ழாமை புகழ்கருணை யூக்கம்
குறிமதுகை கோப மிலாமை - பொறையோர்
நிபமின் றியவீகை நெஞ்சந் துவகை
கபமொன் றியகுணருக் காண். (௧௩௩)

## முத்துக்கம்.

ஆதிபௌ திகமாதி தெய்விக மான்மிகமென்
றோது துயர்மூன்றி னுட்க வரு மிழ் மின்
வாத மறைமேவில் வன்னி பயமாதி
பௌதிக மாகும் படர். (௧௩௪)

வாயு முதனோவு மானுடர் மாப்பறவை
பேயசுரர் நாகத்தார் பீடையாம் - காயத்தின்
மானுஞ் சினமவா மாச்சரிய மாதிமனத்
தானதுய ராதியான் மா. (௧௩௫)

இடனில் கருப்புகு வீங்குப் பிறந்த
னடையுடன் மூத்த னரைத்தன் - மடமை
நினைவறச் சாத லிளையம் புகுந்த
லனையவை தெய்விக மாம். (௧௩௬)

## மூவேடணை.

மகப்பற்று தாரத் தருத்தற்ற மெல்லாஞ்
சகப்பற்றுச் சங்கற்ப மெல்லா - மகப்பற்ற
வெப்பொருளு மற்றப்பற் றிவ்வே டணைமூன்றும்
மெய்ப்பொருள் கண்டால் விடும். (௧௩௭)

### மூவவத்தை.

காணுமது நேரோ நனவா நிலைபேறு
காணாமை காணு மதுகனவா மொன்றையுங்
காணா தொழிகை சுழுத்தியாங் காணாமை
காணுங்கட் கில்லை யவை. (௧௫௮)

### நாற்கரணம்.

ஐய மனனா மபிமான மாங்கார
மையலற வேதுணிதன் மாமதியாஞ் - செய்ய
வருசிந் தனைசித்த மாகு மவையே
யொருநான்கா முட்கரண மொன்று. (௧௫௯)

### ஐம்பூதம்.

காசினிநீர் தீகால்வான் கந்தஞ் சுவையொளியூ
றோசைமா பூத முறுகுணங்கள் - மாசில்
செவிமெய்வாய் கண்மூக்குச் செப்பியதுண் பூத
மவையறியு மைம்புலன்க ளாம். (௧௬௦)

ஓதுகுணம் வான்முதலா வொன்றிற்கொன் றேறுமுறை
யீத னடைபோக் குதலின்ப - நீதிவாய்
கையொடுகால் பாயு ருபத்தங் கருமங்கள்
செய்யும் புலனாகச் செப்பு. (௧௬௧)

பூதநிறம் பொன்வெண்மை செம்மை கருமைபுகை
போது முருவ மதற்குரைக்கில் - நீதி
சதுர மதிபாதி மூன்றுறு கோண
மதியமாம் வட்டமவை யாம். (௧௬௨)

### உண்ணிலை.

புத்திகருமப் புலன்பத் தின்விடயஞ்
சத்த வசனாதி தான்பத்துச் - சித்த

மகமான வன்றன் கறிவா ரொருவ
னகமா நியவிருபத் தைந்து. (க௱௩)

## புறநிலை.

நசைமயிர்தோ லென்புநிணை நன்னிணைநீர் மூளை
யுதிரம் பெலம்பசி தாக மூறக்க
மிதனை மறப்பிருப்பு மேலோங்க லோடல்
கதிடைத்தன்மானபயங்காதல் கதநா
னிந மாம்புறத் திருபத்தைந்து. (க௱௪)

## இருபத்தெட்டு.

விருதி யிருபத்து மூன்றும் பகுதிபு
நாலாறு கண்ட புருடனுங் கால
மூயர்ந்த வியோமம் வியோமா திதமென்
றியம்பு மிவையிருபத் தெட்டு. (க௱௫)

## தத்துவமுப்பத்தாறு.

தலமுதலான் மாவீறு தத்திவம் வித்தை
சமயில் சதாசிவ மீசன் - கலைமாயை
யேறுவிச்சை கால மிராக நியதியையத்
தைந்தாறாகுந் தத்துவம். (க௱௬)

## தத்துவத்தொண்ணூற்றாறு.

பூதமிறங் கோசம் புறநிலையு மண்ணிலையும்
வாத விகார மலங்குணங்க - ளாதார
மேக புருட வினைய னைந்தவத்தையென
வாக விவைதொண்ணூற் றாறு. (க௱௭)

## தத்துவநிச்சயம்.

உலவாத தத்துவத்தி னுண்மை யுணர்ந்தா
லிலவா மிவையியம்ப லென்னே - பலவாக

கண்ணிலவு மாசடையார் கண்டாற் பலவாமோ
தண்ணிலவொன் றல்லவோ தான். (௧௪௮)

## குணசம்பந்தாவத்தை.

முத்திற ஞானகுணத்தின் மூன்றவத்தை
யுத்தமமாஞ் சாத்திக மாமுணர்ச்சி தான்கரு
மத்திம ராசத மாண்ட சுழுத்திதா
னத்தம தாமதம தாம். (௧௪௯)

## அவத்தாத்ரயவத்தை.

நனவு முதலவத்தை நாலையோ வொன்றின்
நனவு முதனான்குங் கண்டார் - நனவா
நனவு முதனான்குங் காணார்கள் காண்பார்
நனவாக ஞானக னம். (௧௫௦)

நனவி னனவு புலன்வழுக்க மாகு
நனவிற் கனவு நினைவா - நனவில்
மனதினை வின்மை சுழுத்தியினை வின்மை
தனைநா டுதுரியந் தான். (௧௫௧)

கனவி னனவுபோற் காண்ட னனவாங்
கனவிற் கண்டு மறத்தல் - கனவாங்
கனவிற் சுழுத்திகா ணுமவன் பாவ
யனுமதித்த லாமத் துரு. (௧௫௨)

சுழுத்தி நனவொன்றுந் தோன்றாமை தோன்றல்
சுழுத்தி கனவாஞ் சுழுத்தி - சுழுத்தி
யரிய வறிவா வறிகை சுழுத்தி
துரியமாஞ் சொல்லிறந்த பாழ். (௧௫௩)

துரிய நனவா மிதமுணர்ந்த போதந்
துரிய கனவா மதமுணர்ந்த போதந்
துரியச் சுழுத்தி வியோமந் துரியத்
துரியம் பரமாகச் சொல். (௧௫௪)

## ஆதாரகேதாவவத்தை.

சந்தித் திடம்புருவந் தன்னினிலை சாக்கிரமாங்
கந்தரத்தினிற்கை கனவாஞ்சுழுத்தியா
விந்த மெனுமிதய மேவலா மூந்திக்கு
நால்விரலி னுலா வது. (௧௫௫)

## காணகேதாவவத்தை.

நனவிற் பதினைந் கரணமு நான்கு
கனவிற் சுழுத்தி கருத லைமூன்றுந்
தனதாகை வேறுகை தான்றுரிய மற்ற
தெனதுயா னற்ற விடம். (௧௫௬)

## அவத்தைக்கதிவு.

ஒருக்க நனுப்போங் கனுப்போ மூனத்தை
தரிக்கத்தற்தியானத்திற்றற்சுழுத்திபோகு
மரிக்குஞ் சமாதி துரிய மதீதம்
புரித்துப் பரம்விளக்கப் போம். (௧௫௭)

## தரிசனவத்தை.

சுழுத்தி நனவின்வரிற் தோன்றுயிருஞ் சீவன்
பழிப்பி னதீதத்திற் பரமன் - விழித்தவனேற்
றீதொருங்கவாண்ட குரவன்றிருக்கோல
மேதொருங்கித் தோன்று மென. (௧௫௮)

## மாவாக்கியம்.

அஞானியா னென்னு மப்பதங்கள் மூன்றி
னதுவென் பதுபிரம நீயென் பதுசீவ

ஞானு வெனும்பதந் தா னவ்விருவ ரைக்கியமா
மூனு முபாதி யொழித்து. (க௪௯)

### ஓங்காரம்.

புகலு மறையவத்தை காலம் புவன
மிகலுருணைத் தியிறைவர் செய்கை - தகவே
யகார வுகார மகார மதனுற்
சகலமுந் தாரக மாம். (க௫0)

### அசபை.

அஞ்ச வுருவிருபத் தோரா யிரத்தறுனூ
றெஞ்ச லறவின் றியம்பாமற் றனியம்பித்
தஞ்சப் பிரமத்திற் றன்வைதன் றென்னுமதே
அஞ்ச லொழிக்குந் துணை. (க௫௧)

### ஸ்ரீபஞ்சாக்ஷரம்.

சிவமுதற் றத்துவங்க டேவதைகள் செய்கை
யவனிமுதற் பூத மவத்தை - புவனங்கள்
கோசம் பொறிபுலன்கள் கூறுங் கரணமெலா
மீசன் றிருவஞ் செழுத்து. (க௫௨)

### ஸ்ரீஅஷ்டாக்ஷரம்.

நாராய ணாய நமவென் பொருள்சீவ
னோரா ரிறையோக மென்றறிகை - பேர்வேறு
காரண காரிய காயத்தா லொன்றாகும்
பூரண போதப் பொருள். (க௫௩)

### வாக்கியவிவேகம்.

ஐக்கி யதுவிட வொன்று வொருதன்னைப்
போக்கி யிலாத பொருடா னருளாலே
பாக்கியத்தால் வந்து பயிக்கு னலதில்லை
வாக்கியத் தார்காணு மாறு. (க௫௪)

## சிவபரவேறுபாடு.

அறிவா னறிவனென வாகத்தே சீவ
னிறையோனென் பாருண் டிருவர் - பிறியாச்
சுபாசுபங்க ளாலிவரைச் சொல்லவரு பேத
வுபாதிகளா னல்லதரு வொன்று. (௧௬௫)

## சீவலக்ஷணம்.

இதமக மெய்யு பிரண்டு தொழிலு
மதிய தவையறிந்த மாத்திரமே சீவ
னிதன பவங்க டனக்கில்லை யித்த
னதனை யறியா னவன். (௧௬௬)

## பரலக்ஷணம்.

எப்பொருட்குங் காரணமா யெப்பொருட்கு மீசனு
யெப்பொருட்குந் தோற்ற நிலையிறவா - யெப்பொருட்கா
னல்லா திலதா யகமும் புறமுநிறைந்
தெல்லா மறிவா னிறை. (௧௬௭)

## சீவபரவேறின்மை.

உபாதி யொழிந்தா லுயிர்பரங்க ளொன்றே
சுபாசு பராயின்ற தோற்ற - முபாதி
கடாகா யமாகாயம் வேறுகக் காண்கை
யடாகா னறிவொன்றே யாம். (௧௬௮)

## மாயாவிவேகம்.

அறியாத மாயைக் கடியறியத் தேடி
னறிவா லறியவொண்ணு தாகு - மறியாமைக்
கேதுவறியி லறிவா லிருட்கேது
சோதியைக் கொண்டறிந்து சொல். (௧௬௯)

## உலகவிவேகம்.

போதக்கண் பூதங்கள் பொய்யா மவைமெய்யாம்
பேதக் கடாதிப் பிறழ்வுகளிற் - பேதங்கள்
சுத்திகையின் வெள்ளியின்மெய் தோன்றப் படுங்கனவு
நித்திரையைப் பாரக் கில.
(௧௭௦)

அயலாக மெய்போ லகந்தயே தத்தை
மயலாகக் கண்டமா மாயத் - துயில்போலு
லெண்படு மிவ்வுலக முண்டாமா றெங்ஙனே
கண்படைபோ யுண்டோ கரு.
(௧௭௧)

வன்னி யிருக்கமரம் வன்மிசையூ றனதே
தன்னிகழ்ச்சி யின்றேவித் தன்மையா - றன்றுன
தன்னிகழ்ந்தா லுண்டோ சகத்தன் பஞ் சற்குருவால்
வன்னிகண்டா லுண்டோ மரம்.
(௧௭௨)

## ஞானமுதன்மை.

யோகாதி மூன்று முனைவருக்குக் கங்கமா
மாகா தெளிப்பதங்க ளாயழியத் - தேக
மொழிய வருமுத்தி பொன்னுதற்கு ஞான
விழியையல தில்லை வேறு.
(௧௭௩)

## ஞானவைசூரணம்.

பொறிவா யறிபுலன்கள் போதக்கரணை
வறிவானை வெல்லா மடக்கி - யறிவா
யறிவா னறிவ தறியும்பொருளன்
றறியா தறிவ தறிவு.
(௧௭௪)

## ஞானப்பெருமை.

அலையிலே கன்ம மடியிலே யாக்குத்
தலையிலே ஞானந் தரிக்கு - மலையா

தருமறை நூலே யறியுஞா னத்தின்
பெருமை யறியார் பிறர். (௧௭௫)

ஞானபூசை.

இன்பக்கண் ணீராட்டி யேத்தி யெழின்மலரா
வன்பிட்டுத் தம்மை யமிர்தாக்கி - முன்புற்ற
சிற்சட மெல்லாஞ் சிவமாக நோக்கல் சிவற்
கர்ச்சனை யாகு மது. (௧௭௬)

ஞானயோகம்.

யோகத் தபாவமெனும் யோகமது கைகூடி
னேகப் பொருளதனு னெய்தியிடு - மேக
மதுவா மிதுவன் றெனுவகண்ட மான
வதுவாகை மாயோக மாம். (௧௭௭)

ஞானவழி.

புணர்பாவ புன்னெறியுங் கொண்ணின்றந் தெல்லா
முணர்வா மெரிகொளுவி னுண்டோ - வுணராமை
கூடவெந் தேகுந் துயர்டோ குறைந்தமாங்
காரிவெந் திப்பட்டக் கால். (௧௭௮)

யோகமுறுதல்.

யோகத்தா லைத்தைக் கடாதிடையி னுயிர்
போகிற்றுன் பொல்லா வுலகிற் புகாதல்ல
யாகத்தா னெய்துப பயனெல்லா மெய்திப்பின்
யோகத்தான் முத்தி யுறும். (௧௭௯)

ஊழ்வலி.

தந்த வறியாமை போகவுந் தான்போகா
திந்தவுட லிற்ப தென்னென்னி - னுந்துங்
குசவன்கை விட்டாலுங் கடா திரிவி
விசைவந் திடாதே விட. (௧௮௦)

## முத்திசாதனம்.

தருபயன் வேண்டாத் தருவினைகள் சாந்தி
சுருதிகள் கேள்வி துறவி - குருவைப்
பெறுதற்கிக் கேது பெறற்கரிய முத்தி
யறிதற்கிக் கேது வவன். (கஅக)

## ஆசாரியலக்ஷணம்.

இறையா முடன்முதல் சித்தமீ ருக
விறையோனே யானல்லே னென்று - மறைநீ
யதுவாகு மென்ற தெளிவானே னென்று
விதுநீகா ணென்பா னிறை. (கஅஉ)

## ஆசாரியன்மகிமை.

உள்ளத் தவியின் றெளித்தான் பரன் குரவன்
கள்ளத் தனைத் தவிர்க்கக் காட்டினான் - வள்ள
லருவான கோலமோ வங்கோலங் காணக்
குருவான கோலமோ கூறு. (கஅங)

## அநாசாரியலக்ஷணம்.

ஆமிற்புணர்ப்பாற் சொற்பக் தொடுகடலீ ராமை
மயிர்ப்படா மின்மினியின் கன்னி - முயற்கோ
டெருக்கின்பான் மெய்புணர் வில்லாதான் பண்ணுங்
குருத்துவமு மேறாகக் கொள். (கஅச)

## பக்குவலக்ஷணம்.

காய நிலையின்மை கண்டான் கருத்துச்செந்
நீயினடி யற்றான் நிகழ்ந்த வினைவரவின்
வாயுறு பக்குவத்தின் னெஞ்சம் வரியுமுளை
யாயவ னுள்ளத் தமம். (கஅரு)

## அபக்குவலக்ஷணம்.

தம்பாற் றவந்தூய்மை வாய்மை தயாவிலா
ரும்ப ரடிபேணு ருள்ளபொரு - ளைம்பார்
பொருள்செய்ய வாதரிப்பார் போகவினைவா
ரருள்செய் யலாகா தவர். (௧௮௬)

சித்தியா மிற்குஞ் சிலர்க்கு விபரீதப்
புத்தியா குஞ்சிலர்க்குப் போதமே - சுத்தமாம்
பானீய மொன்றேனும் பாம்புண்டா னஞ்சீனு
மானீயு நல்ல வமிர்து. (௧௮௭)

## சிஷ்சரிதை.

கழல்போற்ற வாயாரக் கண்மல்க வுள்ள
மழல்சேர் மெழுகி னழிவெய்த யாக்கை
யெழில்சேர் குருபரன்றன் சேவலே செய்க
நிழல்போல முன்பிறை நின்று. (௧௮௮)

சந்தனந் தாம்பூலந் தாரத னஞ்செயன்
மந்தனம் பொய்வெய்ய மாற்றங்கள் - சிந்தைக்
கரவடி மானங் கலுழ்ச்சிசளிப் பின்ன
குரவனை மேவாது கொள். (௧௮௯)

## சம்பிரதாயலக்ஷணம்.

அங்கையுற்ற நீராக்கொண் டாக்கை பொருளாவி
பங்கயக்கண் ணுற்கொண்டு பண்டைவினைச் - சங்கையறப்
பூத மலமுழுதம் போத மெனவிகழ்த்தப்
பாதமலர் வைத்தான் பரன். (௧௯௦)

## ஞானியர்மேவுறுபாடு.

ஆக்கை முதற்சித்த நீரக வெப்பொருளு
நோக்குமவன் றன்னை நோக்கா - தகைசடமாச்

சாக்கியா நின்றவவன் சற்குருவாய் வந்தபரன்
வாக்கில் வெளிப்படுங்காண் வந்து. (௧௧௯)

கலைக்கட்டளை முற்றிற்று.

---

## அநுபவக்கட்டளை.

### சிவதரிசனம்

போக்கு மனனொருக்கிப் போதமங் கில்லாமை
நோக்கிய நோக்காலந் நோக்கத்தை - நோக்கென்றுன்
றொன்றாத வண்ணம்போய்த் தஞ்சிற் றிருளறிவா
சான்றாகி நின்றேனன் றான். (௧)

வினைப்பய னென்னையினி மேவாவின் றாதி
யனைத்து மழிந்து மழியே - னெனக்கின்று
முன்பக்கந் தீழ்மேன் முதலிடையீ றென்றனவு
மென்பக்கத் தாணை னியான். (௨)

இல்லாது முள்ளது மெல்லா மறிவேறு
னெல்லாப் பொருள்கட்கு மேதுநா - னெல்லா
வுலகும் படைத்தழித்துக் காத்துணர்வா யொன்று
மிலரும் பரமீசன் யான். (௩)

### அரியநூஷணம்.

விரிந்தா னுலகழிய மேனேக்கா னன்னோ
புரிந்தாற் றனையுணரும் போத - மருந்தவா
மாட்சி யுடைய பரமொனவோ மற்றிதன்
காட்சியு மாட்சியுங் கண்டு. (௪)

காரணங்க ளிற்கலந்த காரணமே நின்றுன்
காரணங் களைபொ [illegible] ன்டான் றனைத்தான்

காரணியாய் நின்ற விவனே கண்டாய்
மரணம் பிறப்பற்ற மால். (௫)

### அதீததரிசனம்.

அறிவென் பதனு ளறியும் பொருளு
மறிவு மறியாது மாறும் - பிறிதின்றிச்
சொல்லாட லில்லாத் துரியாதீ தம்பிறக்க
வெல்லா மவிழறவிரு. (௬)

தேய்ந்து தெரிவு தெரியாமை யென்பதற
மாய்ந்த தெனவும் வகையில்லை - மாய்ந்ததுவும்
போந்த விடத்தே புகலு மில்லதொழிய
மாய்ந்த விடத்தில்லை மற்று. (௭)

### வியோமதாரணம்.

அடங்குகை யாலே யதீதமு நின்னை
மடங்கொள் சமுத்திரமே மானும் - நிடங்கொள்ள
நில்லாக் கனவே துரிய நிலையிரண்டு
மல்லாமை யாலைத்தை யாம். (௮)

### பரதரிசனம்.

அதீதம் பொருளொன்ற வப்பொருளே தென்று
னதீதம் பொருளா வறிக்க - புதறொருளை
னுண்டாக்கா னென்றொன் றுரைத்தா னுரைத்ததுவே
கண்டா னதுகாணுங் கண். (௯)

பிறிதற் கறிவிருந்த பெற்றியே யென்ன
வறிவிற் கறிவா யிருந்த - வறிவை
யறிவே யறிகின்ற தன்றி யறியப்
பிறிதேது மில்லை பிறப்பு. (௰)

அகமிதங்க ளில்லை பதிவையர்வு மில்லை
யிகபரங்க ளொன்றுமிய லில்லை - சகமும்
மெரியிறுக்கு வெய்யமாரு வெண்ண விளைறவா
வருவதற்கு கேடோ புணர்வு (௧௧)

ஐக்கியாநுபவம்.

பூத மதிக்க வதிவுவிராம் போதமா
யாதா மதிக்குவதி லிரண்டும் - பேதமறப்
புல்லிப்பிடுக்க் கேவொன்றன் புத்திரனிர் கோக்கண்ணீர்
மல்கித்தாள் விழுந்தான் மகன். (௧௨)

பின்ன மதிர்தசெசாங்கோலைப் பின்னமே
தன்னை யதிர்க்குவதும் தர்சியமைப் - பின்ன
செயன்மான் பதனான் மெயமென்று வீச
னயன்மா ரறிவுறா வான். (௧௩)

அபரக்கியம்.

ஒருக்கவெறிவிலா வுணர்வாம் பரமும்
பருக்க விடயமெனப் பன்னி - யருட்சொரூபன்
போசா திருவென்னைப் போதங்காறு திருத்தான்
வாசாம கோசரத்தீத மாண்டு. (௧௪)

இலங்க வறிர ணைவாரு மேங்குங்
கலங்க வறிவுக் கரணமாம் - புலன்செட்ட
தெங்வாறு கருத்தியா யிம்முன் றவத்தையிறு
மல்லா ரருகா வறிவு. (௧௫)

ஊனுறு மாயிரு முணர்வு முடனிற்கு
மாறு மிடைப படவிறக்கு - கோவேன
வடிவொடு மாரின்றி வாக்கிறக்கு மீயிப்
படியே யிருக்கும் படி. (௧௬)

இரண்ட சமவாயந் தீர்பாழித் தீவ
விரண்டாம்பா ழித்தொன்று மீச - விரண்டும்போய்
மூன்றாம்பா ழித்தொன்று மூன்றும் பதப்பொருளாந்
சான்றாரு மில்லாத் தனி. (௧௭)

## சொரூபதரிசனம்.

ஆவபா வாபாவந் தீர்ந்த வசோசாமு
மோவு மவத்தைகளி லொன்றாக்கிச் - சீவபரந்
தானந் திருந்த தனிப்பதங்கா ணீதென்று
மோனத் திருந்தான் முனி. (௧௮)

நோக்கினன் றானாய் நிகற தனிதமறை
வாக்கினுக் கூறரிய வான்பொருளை - நோக்கிச்
செயிர்தீர்த்தே னென்றெழுந்தான் மைந்தன் சினையின்
அயிர்த்த மினதுறுக் கொப்பு. (௧௯)

நிறைவுற்ற தெவ்வாறு நின்மலனுந் தன்னை
யறிவித்த வாறறிய வாசா - நிறைய
முழுத்துமா லானந்த முத்தீ னுலகோ
யழுத்துமு மைக்குடந்தி ரும். (௨௰)

## அநுபூதி.

இருந்த படியே யிருந்த படிகாண
விருந்தபடியே யிறைவ - னிருந்தபடி
யப்படியே யென்று மசைவொழிய வப்படியை
யெப்படியே யென்றுரைக்கே னியான். (௨௧)

ஊனன்று நானிற் றுயிரன்று முள்ளன்றாய்
தானன்றாய்ப் போத நமமன்று - யானன்று
யென்றுதா னொன்று விறையன்று யானுமாய்
நின்றது வொன்றாய் நீ. (௨௨)

காண்டகையே யென்னைக் கடனன்றே யில்லைநின்
றுண்டகைதான் சூடார்க் கயலன்றே - மாண்டேன்
சயம்புவே யென்னினுனா தானுமன்றோ வெவ்வா
றியம்புவே னென்றறியே னியான். (௨௩)

நாரணனு நான்முகனு நாடப் பெருநின்ன
மாரணமுஞ் சொல்ல வறிகுநிலை - காரணநின்
செம்மா மலர்ப்பாதஞ் சென்னிப் பொறித்தாய்க்குக்
கைம்மாறு காண்கிலேன் காண். (௨௪)

ஒல்லை யுலகு படைத்தழிக்க வன்னுணர்வால்
வல்ல சொருபாவென் வஞ்சமனக் - கல்லைத்
திரித்தருள வேண்டியொரு தேசிகனாங் கோலந்
தரித்தருள வேண்டியதே தான். (௨௫)

சொருப வெனக்குன் றுணைமலர்த்தாள் சூட்டித்
திருவுருவே னொரொப்போ மன்றோ - வருளாலே
நின்னை நினையானே நீயுமருளாலே
யென்னை நினையே னியான். (௨௬)

வந்திக்கச் சென்னிவாய் வாழ்த்த மனமுருக
விந்தத் திருக்கோலத் தெம்பெருமான் - வந்தெனக்குப்
பொன்னங் கழலருளிற் றூணைபோ தச்சொருப
வின்னம் பிறப்பே யிலது. (௨௭)

என்னை பணிசெய்ய வெம்பெருமாற் கெம்பெருமா
னென்னை பணியாக வென்வாக்கு - மின்னிர்த்தி
கற்றென்றும் பாடக் கவியமைங் காவிறைவா
மற்றென்று நம் வேண்டேன் வரம். (௨௮)

அளித்தான் திருமேனி யைம்புலனுங் கொண்டு
களித்தான்பே ரானந்தக் கண்ணீர் – குளித்தான்
குளித்தானம் பாலென்றுங் கார்த்தன்பான் மீண்டு
மளித்தா னருட்சே வடி. (௨௧)

அநுபவக் கட்டளை முற்றிற்று.

ஆக திருவெண்பா ௨௨௦.

பதினெட்டாவது

அமிர்தசார முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாதவூரடிகளாகிய

## மாணிக்கவாசகசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

தமிழ்வேதமாகிய

திருவாசகத்தில்

திருப்படையாட்சியில்

முதற்றிருவிருத்தத்திற்கு

இயற்றமிழாசிரியராகிய

## ஸ்ரீ - விசாகப்பெருமாளையரவர்களியற்றிய

உரை.

---

ஆசிரியவிருத்தம்.

கண்களிரண்டுமவன்கழல்கண்டு களிப்பனவாகாதே, காரிகையார்கடம்வாழ்விலென்வாழ்வு கடைப்படுமாகாதே, மண்களில்வந்துபிறந்திடுமாறு மறந்திடுமாகாதே, மாலறியாமலர்ப்பாதமிரண்டும் வணங்குதுமாகாதே, பண்களிகூர்தருபாடலொடாடல் பயின்றிடுமாகாதே, பாண்டிநன்னாடுடையான்படையாட்சிகள்பாடுதுமாகாதே,

விண்களிகூர்வதோர்வேதகம்வந்துவெளிப்படுமாகாதே
மீன்வலைவீசியகானவன்வந்துவெளிப்படுமாயிடிலே. க

என்பது செய்யு ளென்னுதலிற்றோ வெனின் படையாட்டியோடு பாசவறுத்தகட்டென்ற தலைவன் சற்குருவால் அவன் வருவதென வுரைத்த பருவமும் வந்தது அவனும் வருவன் என்றுந்துணிந்த பாங்கிக்குத் தலைவி அவன் வெளிப்படின் றனக்குளதாம் போகாதத்தப்பேற்றைக் கூறுதலையுரைத்துத னுதலிற்று.

இ - ள். கலைநுருக்கொடு வலைவீசி மீனினைப்படுத்த சிவ னெனுந் தலைவன்வந்து வெளிப்படுவனே லென்னிரண்டு கண்களு மவன்றிருக்கழல்கண்டு களிப்பனவாய மகிழ்ச்சி யுறுவதாகாது. பிரிவறியாத தன்றலைவருடன் புணர்ந்து மிக்கு மேனி மாதர்வாழ்வினின் மென்வாழ்வு கடைப்படுமாறு மாகாதினி மண்ணுலகங்களின்வந்து பிறப்பதுமாறு மிறப்பது மாறு முறுவதாகாது. திருமாலறியாத் திருமலர்ப்பாத மிரண் டினையும் வணங்குவதென்று சொல்லுஞ்சொன்மகிழ்ச்சியு முறுவதாகாது. களிப்பினைமிகுக்கும் பண்ணினைப்பொருந்திய பாடலோடாடல் பயின்றிடுமாறு முறுவதாகாது. கல்லாலிலமர்ந்த திருப்பாண்டிநாட்டினையே திருப்பெருந்துறையுடையான் படையாட்சிகள் பாடுதுமென்று சொல்லுஞ்சொன்மகிழ்ச்சியு முறுவதாகா திருமாலுடைய பிரமாபாசங்களிலடுத்தக்கதாக மான் மழு சதுர்ப்புயத்தோடுவந்து வெளிப்படுமாறு வெளிப்படுத்து முறுவதாகாது. ஆண்டியான் சிவபோகமென் னுஞ் சிவாநுபூதி சொருபியாவேனென்பதாம். ஈண்டுத்தலைவி சீவன்முத்தன். தலைவன் சற்குருவடிவ பரசிவன். பாங்கித்திருவருளெனவறிக. சைவாகமத்துமுத்தியிலு மும்முதலுமுண்டென்பதனுன் முத்தியினுமாண்டா னடிமையிருக்க வியவாறு

கூற லாகாதெனின், அறியாதுகூறினாய் மலமாயா கன்மங்க ளோடுகூடித் திரோதப்பட்டுச் சனனமரண முற்றுவருமான் மா விருவினையுமொரு காலத்தேவந்து புசிக்கைக்குச் சமமுற் றவெல்லையிற்போன பலகோடிபவங்களிலே செய்துவைத்த ச ரியாகிரியா யோகத்தைப் பயனுள் மலபரிபாகப் பட்டுச்சிவ ஞானத்தைப்பெற்றுத்திருவருடாரகமாகநின்று சீவகரணங்க ளெல்லாஞ் சிவகரணங்களாய்ச் சிவமேயொன்றாய்ச் சாயுச் சியமானவன்; சாயுச்சியமாயிடத்து வேறாய்நின்று கலப்பின் கலத்தல் கூடாமையானும் ஒன்றாய்நின்று கலப்பின்கலத்த லின்மையானும் அப்பொடுகலந்த வுப்புப்போல வேறறநின் று சாயுச்சியமானவன்; ஆனவிடத்து முன்னுமுடனு மிருக்கின்ற மலமுன்புபோலத் திவிக்கவிப்பனவுஞ் செய்யாமலிருக்கும்; நிற்கவே ஆன்மாசிவமேயாகி அத்துவிதமாய் நிற்பதுசலா லா ன்ம சிவனையுஞ்சுட்டி யறியா விடவிருவென்று சுட்டியறிய ப்பட்டனவெல்லாம் விடயமாய்ப் பொய்ப்பொருளாமா தலி னவ்வாறு அவைபொய்ப்பொருளென வறிந்தவிடத்தே சுட்டற்றவன்மையாகிய சிவரூபமானவன்; அங்ஙனஞ் சிவரூப னை முத்தர்மாவிருமை யிவ்வாறு சுட்டியறிதலின்றாமாத லி னிவ்வாறு கூறுதலாமெனக்கொள்க. இதனைச் சிவஞான போதம் - ௮ - ௯ - ௰ - ௰௧ ஆஞ் சூத்திரங்களாலு மிந்நான் கு சூத்திரங்களின் பொருள்களைவிரித்துச் சித்தியார் சிவப்பி ரகாசத்திற் கூறிய திருவிருத்தங்களாலுமறிக; ஏகாரங்களிற் றவை தேற்றமெனினுமமையும். அன்றி வினாவாகக்கொண்டா மெனப் பொருள்கொள்ளின் காரிகையார்கடம்வாழ்விலென் வாழ்வுகடைப்படுமோகாதேயென்பதைத் தெருப்பனந் செ ய்யவேண்டும். இத்துணிய பதைத்திறங் கண்டாம். அவற் றை விரிப்பிற்பெருகு மென்றொழிந்தாம். இச்செய்யுளிற் கூற ப்படுமோகாதென்னு மொழிக்கு ஆமெனப்பொருள்கூறி னு

காரிதாவெனினுமாகாது, என்னெனின் யாண்டும் எதிர்மறையை யுடன்பாடாகக் கூறுதற்கிலக்கண மின்மையின். செய்யாவென்று முன்னின்றபொருளை யேவலெதிர்மறை வினைமுற்றை யுடன்பாட்டுவினைமுற்றுப் பொருள்கொள்ளுதலேபோ லிதனையும் பொருள்கொள்ளுதலைகாரிதாவெனின் ஆகாது; என்னெனின் அதனை யெதிர்மறைவினைமுற்றுப் பொருள்கொள்ளுமிடத்து எதிர்மறையாகார மடையிற் புணர்ந்துகெட்டு நின்றதாகவு முடன்பாட்டு வினைமுற்றுப் பொருள்கொள்ளுமிடத்து அவ்வெதிர்மறையாகாரம் வேண்டாது நிற்பதாகவுங் கொள்ளுதலாறு மிகவிடத்தில் எதிர்மறையாகாரம் புணர்ந்து நிற்றலினுடன்பாடாகக் கொள்ளுதற்கேலாமையானுமென்க. கண்களிரண்டானை - குறளைக்கண்டு மூளைக்கண்ணுமாம். வினையெச்சமு விரிக்கப்படாவினுடனாகக் கூறுதற்கிஃதிலக்கணமென் றெனவிடுத்தனம்.

முதற்றிருவிருத்த

வுரை முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.